DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**CC.No. 332/2019**

| Deposition of the | : | PW2 | Caste | : | |
|---|---|---|---|---|---|
| Name | : | காஜாமுகைதீன் | Age | : | 58 |
| F/N | : | முஸ்தபா | Occupation | | சமையல் வேலை |
| Village | : | பெருங்குளம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 29-th day of August 2022.

**29.08.2022.**

**முதல் விசாரணை:**

நான் இராமநாதபுரம் மாவட்டம் பெருங்குளத்தில் குடியிருந்து கொண்டு சமையல் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். (**சாட்சி ஆஜர் எதிரியை சரியாக அடையாளம் காட்டுகிறார்).** கடந்த 27.01.2018–ம் தேதி எனது ஹோட்டலில் அ.சா.1 புரோட்டா மாஸ்டராக வேலை செய்து வந்தார். அப்போது எதிரி சாப்பிட வந்தார். ஆம்ளேட் முட்டை பொறியல் புரோட்டா வேண்டுமென்று கேட்டார்.

நாங்கள் போட்டுக்கொடுத்தோம். மீண்டும் ஆம்ளேட் வேண்டுமென்று கேட்டார். அதையும் அ.சா.1 போட்டுக்கொடுத்தார். சாப்பிட்டுவிட்டு எதிரி ஏண்டா பச்சைமிளகாய் போடவில்லை தேவிடியா மகனே என்று அ.சா. 1யை திட்டினார். நான் எதிரியிடம் சமாதானம் செய்து நாளைக்கு வேண்டுமானால் கூடக்கொறைய போட்டுதருகிறேன் என்று கூறினேன். ஆனால் எதிரி கேட்காமல் அ.சா.1 யை அடிக்க வந்தார். அப்போது அ.சா.1 கீழே குனிந்து கொண்டார். அடுப்பு எறிக்க வைத்திருந்த விறகு கட்டையை எடுத்து அ.சா.1ன் இடது பக்க கன்னத்தில் அடித்தார். அப்போது தனவேல் வந்தவுடன் ஆஜர் எதிரி ஓடிவிட்டார். அந்த வழியாக வந்த ஆட்டோவில் அ.சா.1–யை ஏற்றி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். அ.சா.1 கொடுத்த புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு கு.விசாரணை**

என்னுடைய ஹோட்டல் மதுரையிலிருந்து இராமேஸ்வரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் ஓரத்தில் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய கடையில் மக்கள் உட்கார்ந்து சாப்பிட டேபிள், ஜேர் வசதிகள் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய ஹோட்டலுக்கு வருபவர்கள் பெரும்பாலும் எனக்கு தெரிந்தவர்களாகத் தான் இருப்பார்கள் என்றால் சரிதான். என்னுடைய ஹோட்டலில் எப்போதும் கூட்டமாக இருக்கும் என்றால் சரிதான். போலீசார் என்னை சம்பவ தினத்தன்றே மதியம் விசாரித்தார்கள். என்னுடைய ஹோட்டலில் நானும், அ.சா.1 மட்டும் தான் சம்பவ

தினத்தன்று பணிபுரிந்தோம்.

நான் அ.சா.1 யை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லும்போது ஹோட்டலை மூடிவிட்டு சென்றேனா என்றால் இல்லை. சம்பவமானது என்னுடைய ஹோட்டலுக்கு உள்ளே நடந்ததா இல்லை வெளியே நடந்ததா என்றால் வெளியே நடந்தது. அடுப்பு எறிக்க வைத்திருக்கும் கட்டைகளை எங்கு வைத்திருப்போம் என்றால் கடைக்கு வெளியே வைத்திருப்போம். சம்பவம் நடக்கும்போது நான் பார்சல் கட்டிக்கொண்டு இருந்தேன். சம்பவம் நடந்த இடத்திலிருந்து பார்சல் கட்டும் இடம் எவ்வளவு தூரம் என்றால் சிறிய தூரம் தான் அந்த சுவர் எனது நெஞ்சு வரை இருக்கும்.

அங்கிருந்து பார்த்தால் தெரியும். ஆஜர் எதிரி அன்றைய தினம் சாப்பாடு கேட்டு காலதாமதம் ஆனதால் அ.சா.1 யை பார்த்து ஏன் காலதாமதம் ஆகிறது என்று கேட்டார் என்றாலும், உடனே அ.சா.1 ஆஜர் எதிரியை அசிங்கமாக பேசி அடிக்க முயலும்போது கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றாலும், அந்த காயத்தை வைத்து பொய்யாக வழக்கு தொடரப்பட்டது என்றாலும், அ.சா.1 எனது ஹோட்டலில் பணிபுரியும் ஊழியர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை –இல்லை</u>

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**CC.No. 332/2019**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | முருகேசன் | Age | : | 55 |
| F/N | : | முனியாண்டி | Occupation | : | புரோட்டா மாஸ்டர் |
| Village | : | குமராண்டிவலசை | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 29-th day of August 2022.

**29.08.2022.**

**முதல் விசாரணை:**

நான் இராமநாதபுரம் மாவட்டம் குமராண்டி வலசையில் குடியிருந்து கொண்டு புரோட்டா மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். (**சாட்சி ஆஜர் எதிரியை சரியாக அடையாளம் காட்டுகிறார்**). கடந்த 27.01.2018-ம் தேதி பெருங்குளம் காஜா முகைதீன் என்பவருக்கு சொந்தமான ஹோட்டலில் நான் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி ஹோட்டலுக்கு வந்து புரோட்டா சாப்பிட்டார்.

ஆம்ளேட் வேண்டுமென்று கேட்டார் நான் ஆம்ளேட் போட்டுக்கொடுத்தேன். அதை சாப்பிட்டுவிட்டு வந்து எதிரி என்னிடம் ஆம்ளேட்டில் ஏண்டா பச்சை மிளகாய் போடவில்லை தேவிடியா மகனே என்று அசிங்கமாக திட்டினார். கையை ஓங்கி அடிக்க வந்தார். நான் கீழே குனிந்துவிட்டேன். அப்போது ஹோட்டலின் உரிமையாளர் காஜா முகைதீன் வந்து தடுத்து நாளைக்கு பச்சைமிளகாய் போட்டு தருகிறேன் என்று சொல்லி எதிரியை அழைத்தார். ஆனால் எதிரி அடுப்பு எறிக்க வைத்திருந்த கட்டையை எடுத்து எனது இடது பக்க கன்னத்தில் இடித்தார். அருகில் இருந்த தனவேல் மற்றும் பலர் வந்தவுடன் எதிரி அங்கிருந்து ஓடிவிட்டார்.

காயம்பட்ட என்னை இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். நான் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள். அருகில் இருந்த எனது மகன் நான் சொல்ல, சொல்ல புகார் ஒன்றை எழுதி என்னிடம் படித்துக்காட்டினார். அதில் நான் கையொப்பம் செய்தேன். அந்த புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அந்த புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது. (**அந்த புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு கு.விசாரணை**

நான் முதல் விசாரணையில் கூறிய விவரத்தையே தான் போலீசார் விசாரணையிலும், புகாரிலும் கூறினேன் என்றால் சரிதான். நான் வேலை பார்த்த கடையை சுற்றி நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தன்று எங்கள் ஹோட்டலில் சுமார் 4, 5 நபர்கள் சாப்பிட்டு இருப்பார்கள். சம்பவ இடமான எங்கள்

ஹோட்டலுக்கு முன்பு இராமேஸ்வரம் To இராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலை உள்ளது என்றால் சரிதான். எங்கள் ஹோட்டலுக்குள் உட்கார்ந்து சாப்பிட டேபிள், ஜேர்கள் உள்ளது என்றால் சரிதான்.

என்னை காஜா முகைதீன் தான் அன்றைய தினம் மருத்துவமனையில் சேர்த்தார். என் மகன் கேட்டரிங் படித்துள்ளார். புகாரில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் சொல்ல, சொல்ல என் மகன் எழுதினார். ஆனால் அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் புகார் மனுவில் மட்டும் தான் கையொப்பம் இட்டேனா என்றால் ஆம் வேறு எதிலும் கையொப்பம் செய்யவில்லை. போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்த பின் மறுபடியும் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை.

நான் அரசு மருத்துவமனையில் 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். எனக்கு X–Ray எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கப்பட்டது. எதிரி அன்றைய தினம் சாப்பாடு கேட்டு நாங்கள் உடனே தராததால் எதிரி எங்களிடம் ஏன் காலதாமதம் ஆகிறது என்று கேட்டதால் நான் எதிரியை அசிங்கமாக பேசி, அவரை அடிக்க முயலும் போது கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றாலும், அந்த காயத்தை வைத்துக்கொண்டு எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனக்கு ஆம்ளேட்டிற்கும், பொறியலுக்கும் வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும். எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை –இல்லை</u>

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**